Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 14 / 2018

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.6**

| | | | |
|---|---|---|---|
| Name: | கோபி | Calling: | தலைமை காவலர் |
| Father's Name: | மனோகர் | Religion: | |
| Village: | குடியாத்தம் | Age: | 39 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.06.2026.

(1ம் எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி ஆஜர்.)

அ.சா.2 மனுவின்பேரில் அழைத்து எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரத்தை தான் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜமாணிக்கம் அவர்களின் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நானும், தலைமைக்காவலர் முருகன் என்பவரும் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டோம் என்றால் 02.00 மணி. நாங்கள் தனித்தனி வாகனத்தில் சென்றோமா என்றால் இல்லை, ஒரே வாகனத்தில் தான் சென்றோம். எந்த இடத்தை நோக்கி நானும், தலைமைக்காவலர் முருகனும் சென்றுகொண்டிருந்தோம் என்றால் உதயேந்திரம் நோக்கி சென்றுகொண்டிருந்தோம். உதயேந்திரம் என்பது 2, 3 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். உதயேந்திரத்தில் குறிப்பிட்டு எந்த இடத்தில் 1, 2ம் எதிரிகளை பிடித்தோம் என்றால் சரியாக நினைவில்லை. குறுக்கே வாகனம் வந்துவிட்டது. 1ம் எதிரியை முதலில் யார்

பிடித்தது என்றால் நாங்கள் இருவருமே பிடித்தோம். பிடித்தபோது 1ம் எதிரி எவ்வளவு தூரம் ஓடியிருப்பார் என்றால் 1ம் எதிரி தப்பித்து ஓடவில்லை. மற்றொரு நபர் தான் ஓடினார். நானும் தலைமைக்காவலர் முருகனும் 1ம் எதிரி மற்றும் டிராக்டரை பிடித்து வந்து சிறப்பு உதவி ஆய்வாளரிடம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றால் இல்லை, தகவல் சொன்னோம், சிறப்பு உதவி ஆய்வளார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். சம்பவ இடத்தில் தான் நாங்கள் கையொப்பம் போட்டோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தான் தலைமைக்காவலர் முருகனும் இரண்டு கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். டிராக்டரை மடக்கி பிடித்தபோது பொதுமக்கள் எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் 4, 5 நபர்கள் பார்த்திருப்பார்கள், பக்கத்தில் வீடுகளும் இருந்தது. 1ம் எதிரி அவ்வாறு ஒரு வாகனத்தை ஓட்டி வரவில்லை என்றாலும், நான் அவரை சம்பவயிடத்தில் பிடிக்கவில்லை என்றாலும் சரியல்ல, வண்டி வந்த இடம் சரியாக நினைவில்லை, பக்கத்தில் டேனரி இருந்தது. அந்த டேனரியின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சிறப்பு உதவி ஆய்வாளர் புள்ளிவிவரத்திற்காக பதிவு செய்த வழக்கிற்காக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம்எதிரி டிராக்டரையும் ஓட்டி வரவில்லை, மணலையும் கடத்தி வரவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) கோபி

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR